## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீபல்ஸ் லீசிங் என்ட் பைனான்ஸ் பி.எல்.சி நிறுவனம் (“கம்பனி”) மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (“தொகுதி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான தொகுக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தொகுதி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளபபடுகின்ற கணக்காயவில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவது இல்லை. பிறழ் கூற்றுக்கள் ஆனவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்தில் எடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்கம்பனிதொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகள்

### 1.5.1 நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) மறுசீரமைக்கப்பட்ட அல்லது மீள் திட்டமிடப்பட்ட மற்றும் மறுநிதியளிப்பு வசதிகளின் மொத்த வயது பகுப்பாய்வானது கணினிமுறைமையினால் கைப்பற்றப்படவில்லை. | ‘‘மாத இறுதி அறிக்கை’’ என்பது நிதிப்பிரிவு பயன்படுத்தும் முக்கியமான அறிக்கைகளில் ஒன்றாகும், மேலும் இந்த அறிக்கையில் தற்போது மொத்த வயது பகுப்பாய்வுக்கான தரவுகள் இல்லை. நிதிக் குழுவானது, ‘‘ஒட்டுமொத்த வயது பகுப்பாய்வைப் பெற மீட்பு அறிக்கை’’ என்ற தனி அறிக்கையை நம்பியுள்ளது. அதன்படி, மாத இறுதி அறிக்கையில் மொத்த வயது பகுப்பாய்வுக்கான புள்ளிவிவரங்களைச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், வெளியகக் கணக்காய்வாளர்களின் தேவைகளை எளிதாக்குவதற்கு தகவல் | மாத இறுதி அறிக்கையில் மொத்த வயது பகுப்பாய்வைக் கண்டறிய கணனியமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | தொழில்நுட்பத் துறைக்கு ஏற்கனவே முறையான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நிறுவனத்தின் தற்போதைய நடைமுறையின்படி, குறைபாடு செயல்முறை ஒரு கைமுறை பயிற்சியாகும். இந்த செயல்பாட்டில், நிர்வாகம் அத்தகைய தேவையான தரவை உருவாக்க பல உள்ளக அறிக்கைகளை தொகுக்கிறது. எடுத்துக்காட்டாக, நிலுவையில் உள்ள நாட்கள், வசதிகளின் முதிர்வு திகதி, முதல் செயல்படாநிலை திகதி, வாட்ச் லிஸ்ட் வாடிக்கையாளர்கள், மறு-திட்டமிடல் வாடிக்கையாளர் பட்டியல் போன்ற தகவல்களைப் பெறுவதில், நிர்வாகத்திடம் ஒரு தகவல் ஆதாரம் இல்லை, எனவே, கணினி அறிக்கைகளின் எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டது. அத்தகைய தகவல்களைப் பிரித்தெடுக்க. மேலும், அதிகப்படியான கையேடு வேலை மற்றும் பல அறிக்கைகளை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்தல் குறைபாடுகள், தவறான அறிக்கைகள் மற்றும் மனித பிழைகளுக்கு வழிவகுக்கும். | தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து, எங்கள் அமைப்பின் மூலம் LGD, PD மற்றும் EAD கணக்கீடுகளை வெற்றிகரமாக முடித்துள்ளோம். இருப்பினும், தொடர்ச்சியான மாதிரி மேம்பாடு மற்றும் நிர்வாக சரிசெய்தல் காரணமாக சில கணக்கீடுகள் கணினியின் திறன்களுக்கு அப்பால் உள்ளன. தடைக்காலம் தொடர்பான மாற்றங்கள், வெளிப்புற கணக்காய்வு நடைமுறைகளில் திருத்தங்களைச் செயல்படுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதார நிலப்பரப்பு ஆகியவை இதில் அடங்கும். இருந்தபோதிலும், கணினி அடிப்படையிலான அணுகுமுறை மூலம் குறைபாடு கணக்கீட்டை அடைய நிறுவனம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. | இந்த செயல்முறையை தானியக்கமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், கைமுறையான தலையீட்டைக் குறைக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. கூடுதலாக, இது பல்வேறு ஆதாரங்களில் இருந்து தரவைப் பிரித்தெடுப்பதற்கும், அதையே தொகுப்பதற்கும் செலவிடும் நேரத்தை மிச்சப்படுத்தும் மற்றும் பாரிய எக்செல் பணித் தாள்களை நம்பியிருப்பதைக் குறைக்கும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்ட 2021 | சபையுடன் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு | ஒப்புக்கொள்கிறேன். இடர் மதிப்பீட்டு அறிக்கையை | BIRMC வரவிருக்கும் சபைக் |

| | | | |
|---|---|---|---|
| ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க (கூட்டுறவு ஆளுகை) பிரிவு எண். 10.3.j.vii | (BIRMC) வரவிருக்கும் சபைக் கூட்டத்திற்கான இடர் மதிப்பீட்டு அறிக்கையை சபையின் பார்வை, ஒப்புதல் மற்றும்/அல்லது குறிப்பிட்ட வழிகாட்டுதல்களைக் கோரும். இருப்பினும், நிறுவனத்தின் தற்போதைய நடைமுறை BIRMC குறிப்புக்களை அடுத்த சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதாகும். | சபையிடம் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்வோம். | கூட்டத்திற்கான இடர் மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும், சபையின் கருத்துகள், ஒப்புதல் மற்றும் / அல்லது குறிப்பிட்ட வழிகாட்டியின் தேவைப்படும் வழிகாட்டுதல்களைக் கோர வேண்டும். |

## 1.7 IT பொது கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரியின்படி, InBank மற்றும் Microfin அமைப்புகளில் ராஜினாமா செய்த ஊழியர்களின் பயனர் கணக்குகள் சரியான நேரத்தில் செயலிழக்கப்படவில்லை. ராஜினாமா செய்த ஊழியர்களின் பயனர் கணக்குகளை சரியான நேரத்தில் செயலிழக்கச் செய்வதில் போதுமான நடைமுறைகள் இல்லாததால், வணிகக் கொடுக்கல் வாங்கல்களுக்கான பொறுப்புகளை ஒதுக்கும்போது குறிப்பிடத்தக்க சிக்கல்கள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, ஏற்கனவே உள்ள பயனர், ராஜினாமா செய்த ஊழியரின் கணக்கைப் பயன்படுத்தி கணினியில் மோசடியான கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம், ஆனால் அவர்/அவள் வேறொருவரின் பயனர் நற்சான்றிதழ்களைப் பயன்படுத்துவதால், அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு அவர்/அவள் பொறுப்பேற்க முடியாது. | 28 தாமதமான நிகழ்வுகளில், 3 பயனர்கள் (404204, 404638, 30720) மட்டுமே அணுகல் யூனிட்டில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தாமதமாகிவிட்டனர். இதற்குக் காரணம் கடந்த ஆண்டு தானாக செயலிழக்கச் செய்யும் திரையில் ஏற்பட்ட பிழையாகும், எனவே அணுகல் அலகு கைமுறையாக செயலிழக்கச் செய்தது. இது மார்ச் 2023 முதல் சரி செய்யப்பட்டது. ஏனைய 25 தாமதமான செயலிழப்புகளும், அணுகல் பிரிவுக்கு HR பிரிவினால் ராஜினாமா செய்த ஊழியர் விபரம் தாமதமாக அறிவிக்கப்பட்டதே காரணமாகும். | நிறுவனத்தின் அமைப்புக்களில் ராஜினாமா செய்த ஊழியர்களின் அணுகலை உடனடியாக அகற்றுவது முக்கியம், ஏனெனில் இந்தக் கணக்குகள் தவறாகப் பயன்படுத்தப்படும் அபாயத்தைத் குறைக்க இது உதவும். ராஜினாமா செய்த ஊழியர்களின் பயனர் கணக்குகள் அவர்கள் ராஜினாமா செய்த திகதிகளில், வணிக நாளின் முடிவில் செயலிழக்க செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.4,342 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 6,650 மில்லியனாக காணப்பட்டதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா. 2,308 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வீழ்ச்சிக்கான பிரதான காரணங்கள் வட்டி செலவுகள் மற்றும் தனிப்பட்ட செலவுகள் முறையே ரூபா.7,375 மில்லியனாலும் மற்றும் ரூபா. 486 மில்லியனாலும் அதிகரித்தமையும் மற்றும் வட்டி வருமானம் ரூபா.6,315 மில்லியனாக அதிகரித்த போதிலும் கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் மற்றும் பிற இயக்க வருமானம் முறையே ரூபா.611 மில்லியனாலும் மற்றும் ரூபா.409 மில்லியனாலும் குறைவடைந்தமையுமாகும்

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

2.2.1 பின்வரும் அட்டவணை மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய நான்கு ஆண்டு காலப்பகுதியில் நிறுவனத்தின் நிதி முடிவுகளை சுருக்கமாகக் கூறுகிறது.

| ஆண்டு | 2022/2023 | 2021/2022 | 2020/2021 | 2019/2020 | 2018/2019 |
|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் (ரூபா. மில்லியன்) | 30,197 | 23,881 | 24,983 | 31,459 | 30,836 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் % அதிகரிப்பு/(குறைவு). | 26.45 | (4.41) | (20.58) | 2.02 | - |
| வட்டி செலவுகள் (ரூபா. மில்லியன்) | 18,207 | 10,832 | 13,064 | 15,787 | 15,646 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் % அதிகரிப்பு/(குறைவு). | 68.08 | (17.09) | (17.24) | 0.90 | - |
| வரிக்கு முந்தைய இலாபம் (ரூபா. மில்லியன்) | 4,342 | 6,650 | 5,873 | 4,552 | 6,585 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் % அதிகரிப்பு/(குறைவு). | (34.71) | 13.23 | 29.02 | (30.87) | - |

2.2.2 முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு, அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விளக்கம் | வோறுபாட்டு தொகை அதிகரிப்பு/(குறைவு) (ரூபா. 000) | வோறுபாடு% | வோறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி செலவு | 7,374,757 | 68.08 | 2021/22 நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் வட்டிச் செலவுகள் 68.08 சதவீதம் அதிகரித்துள்ளது. வைப்புத் தொகையாளர்களுக்கு செலுத்தப்படும் வட்டி/சேர்ப்பு மொத்த வட்டிச் செலவில் மிகப் பெரிய பங்கைக் குறிக்கிறது மற்றும் நடப்பு நிதியாண்டில் ஏற்பட்ட அதிகரிப்பானது, ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அதிகரித்த பாலிசி வட்டி விகிதங்களுடன் இணைந்து நிலையான |

| | | | |
|---|---|---|---|
| | | | வைப்புத்தொகை போர்ட்ஃபோலியோவை அடிக்கடி மறு விலை நிர்ணயித்ததன் விளைவாகும். |
| வட்டி வருமானம் | 6,315,062 | 26.44 | நிறுவனத்தின் வட்டி வருவாயில் வளர்ச்சியானது சந்தை வட்டி விகிதங்களின் கூர்மையான உயர்வால் உந்தப்பட்டது, இது நிலையான வைப்புத்தொகை மற்றும் அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் வட்டி வருமானத்தில் 26.44 சதவீத முன்னேற்றத்தை உருவாக்கியது. |
| கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் | (611,237) | (32.57) | பாதகமான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் புதிய வணிகத்திற்கான குறைந்த தேவை காரணமாக கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் குறைந்துள்ளது. கடனுடன் தொடர்புடைய கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் முந்தைய ஆண்டை விட கணிசமாக குறைந்துள்ளது. |
| தனிப்பட்ட செலவுகள் | 486,132 | 12.15 | SLFRS 9 உடன் இணங்குவதற்கான கணக்கியல் நுழைவு காரணமாக, சந்தை வட்டி விகிதங்களில் கூர்மையான அதிகரிப்பு காரணமாக தனிநபர் செலவுகள் அதிகரித்தன. |
| பிற செயல்பாட்டு வருமானம் | (409,257) | (42.78) | ஏனைய இயக்க வருமானம் முக்கியமாக முதலீடுகளின் பங்கிலாப வருமானம் மற்றும் PPE விற்பனையில் கிடைக்கும் இலாபம், இது கணிசமாக 42.78 சதவீதம் குறைந்துள்ளது.<br>துணை நிறுவனங்களிடமிருந்து பங்கிலாபம் ரூபா. 930.62 மில்லியனிலிருந்து ரூபா. 513.82 மில்லியன் வரை பெறப்பட்டது. |

**2.3 விகித பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட துறைவிகிதங்களுடனான ஒப்பீட்டுடன் கீழே தரப்படுகின்றன.

| விளக்கம் | துறை விகிதம் | நிறுவனம் | |
|---|---|---|---|
| | | **2022/2023** | **2021/2022** |
| **செயல்திறன் விகிதங்கள்** | | | |
| உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 8.95 | 7.68 | 12.74 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 3.00 | 2.47 | 3.85 |
| வட்டி எல்லை | 6.68 | 7.35 | 8.10 |
| **சொத்துகளின் தர விகிதம்** | | | |
| மொத்தச் செயல்படாத முற்பணங்கள் (NPL) | 15.98 | 14.26 | 8.78 |
| போதுமான மூலதன விகிதங்கள் | | | |
| அடுக்கு 1 மூலதனம் (குறைந்தபட்சம் 10%) | 20.50 | 25.76 | 18.76 |
| மொத்த மூலதனம் (குறைந்தபட்சம் 14%) | 21.86 | 26.61 | 19.67 |